கடற்கரை மேலாண்மை மண்டல (CMZ) வரைவு அறிவிப்பாணை 2008-ன் மீது ஆய்வு செய்ய பேராசிரியர் மா.சா. சுவாமிநாதன் தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட வல்லுனர் குழுவின் 16-07-2009 தேதியிட்ட அறிக்கையின் சுருக்கம்

1. கடற்கரை சுற்றுச் சூழலை பராமரிக்கும் நோக்குடன் சுற்றுச் சுழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் கடற்கரை ஒழுங்கு முறை மண்டல CRZ அறிக்கை 1991-ஐ வெயிட்டிருக்கின்றது. கடற்கரைப் பகுதிகளின் பல்வேறு நடவடிக்கைகளை இவ்வறிக்கை ஒழுங்கு படுத்தியது.

2. அதன் அமலாக்கத்தின் போது (1991 முதல் 2009 வரை) இவ்வறிக்கை 25 திருத்தங்களுக்கு உள்ளாகியுள்ளது.

3. ஒரு முழுமையான முறையில் பிரச்சனைகளை ஆய்வு செய்ய பேராசிரியர் ம.சா.சுவாமிநாதன் தலைமையின் கீழ் ஒரு வல்லுனர் குழுவை அமைச்சகம் ஜூன் 2004-இல் அமைத்தது. அக்குழு தனது அறிக்கையை 2005-இல் சமர்பித்தது. அறிக்கை வெளியிடப்ப்பட்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் பொதுமக்களின் ஆலோசனைகளையும், புகார்களையும் பெற வேண்டும் என்ற சுற்றுச் சுழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 -இன் விதிமுறையின்படி, பொது மக்களின் ஆலோசனைகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் அழைப்பு விடுக்கும் வகையில் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வரைவு கடற்கரை மண்டல மேலாண்மை அறிக்கையை அமைச்சகம் 1.5.2008 அன்று வெளியிட்டது; மேலும், 09.05.2008 அன்று அதில் ஒரு திறுத்தமும் வெளியிட்டது. மேலும் மாநில அரசு வேண்டுகோள்களுக்கு இனங்கி அலோசனைகள் மற்றும், எதிர்ப்புகளை பெறுவதற்கான கால அவகாசத்தை நீட்டித்து வரைவு அறிக்கை மீண்டும் தாக்கம் செய்யப்பட்டது. சுற்றுச் சுழல் (பாதுகாப்பு) சட்டம் 1986-இன் படி, அறிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 365 நாட்களுக்குள் இறுதி செய்யப்படாவிட்டால் ஒரு வரைவு அறிக்கை காலாவதியாகி விடுகிறது.

4. வரைவு கடற்கரை மேலாண்மை மண்டல அறிக்கை 2008-ன் மீதான உள்ளூர் சமுதாயங்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் குறிப்புகளைச் சேகரிக்க, சுற்றுச் சுழல் கல்வி மையம், அகமதாபாத் என்ற நிறுவனத்தை அமைச்சகம் பணித்தது.

5. CMZ அறிக்கை வரைவு மீது எராளமான எண்ணிக்கையில் ஆலோசனைகளையும், எதிர்ப்புகளையும் அமைச்சகம் பெற்றது. மேலும், பல்வேறு கடலோர மாநிலங்களைச் சார்ந்த உள்ளூர் சமுதாயங்களுடன் இணைந்து சுற்றுச் சுழல் கல்விமையம் எற்பாடு செய்த 35 கூட்டங்கள், அதில் அனைத்து கடலோர மாநிலங்களில் இருந்தும் கலந்து கொண்ட சுமார் 4,000 பேரிடமிருந்து பெறப்பட்ட ஆலோசனைகளையும் சுற்றுச் சுழல் கல்விமையம் தனது அறிக்கையில் தாக்கம் செய்தது.

6. கூடுதலாக, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம், சுற்றுச் சுழல் மற்றும் வனத் துறைகளின் நாடாளுமன்றக் குழுவும் கடற்கரை மேலாண்மை மண்டல வரைவு அறிக்கை 2008 -இன் செயல்ப்பாட்டு அம்சங்கள் குறித்து நவம்பர் - டிசம்பர் 2008-இல் ஆய்வு செய்தது. இந்த நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையை அமைச்சகம் மார்ச் 2009-இல் பெற்றுக்கொண்டது.

7. நாடாளுமன்றக் குழுவின் பரிந்துரைகள் உள்ளிட்ட, அனத்து ஆலோசனைகள் மற்றும் எத்ர்ப்புகளை ஆய்வு செய்யவும், நாட்டிற்கான கடற்கரை மண்டல மேலாண்மை அணுகுமுறையை வடிவமைக்கவும் அமைச்சகம் 15.06.2009 அன்று பேராசிரியர் மா.சா.சுவாமிநாதன் தலைமையின் கிழ் நான்கு உறுப்பினர் கொண்ட வல்லுனர் குழுவை அமைத்தது. குழுவின் பணி விவரக்குறிப்புகளாக: (i) கடற்கரை

மண்டல மேலாண்மை வரைவு அறிவிக்கை 2008-இன் மீது அமைச்சகத்தால் பெறப்பட்ட குறிப்புகளை ஆய்வு செய்வது மற்றும் (ii) ஒருங்கிணைந்த கடற்கரை மண்டல மேலாண்மைகான கொள்கை மற்றும் சட்ட உருவாக்கம் குறித்த அறிவுரை வழங்குவது ஆகியனவாகும். வரைவு அறிக்கை மீது சுற்றுச் சுழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தால் பெறப்பட்ட குறிப்புகளைக், குழு ஆய்வு செய்தது. மேலும், வரைவு அறிக்கை மீது தங்களது குறிப்புகளை அனுப்பிய பல்வேறு குழுக்களின் பிரதினிதிகளுடன் வல்லுனர் குழு ஐந்து கூட்டங்களை நடத்தியது. அவை:

i. ஜுன் 27, 2009--கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் (CRZ) மற்றும் கடற்கரை மேலாண்மை மண்டலம் (CMZ) தொடர்பான பிர்ச்சனைகளை விவாதிக்கும் கூட்டம்.

ii. ஜுலை 7, 2009 --மத்திய, மாநில அரசின் பிரதினிதிகளுடன் சந்திப்பு.

iii. ஜுலை 8, 2009 -- தொழில் மற்றும் வர்த்தக அமைப்புகளின் பிரதி நிதிகளின் சந்திப்பு.

iv. ஜுலை 11, 2009 -- அரசு சாரா அமைப்புகள் மற்றும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் சந்திப்பு.

v. ஜுலை 16, 2009 -- அறிக்கையை இறுதிபடுதுவதற்கான கூட்டம்.

8. வல்லுனர் குழு 16.07.2009 அன்று தனது அறிக்கையை தாக்கல் செய்தது. அமைச்சகம் அறிக்கையை எற்றுக்கொண்டது. மேற்கூறிய வல்லுனர் குழு கீழ்காணும் தனது பார்வைகளை முன்வைத்தது:

- கடற்கரை மேலாண்மை மண்டல (CMZ) வரைவு அறிவிப்பாணைக்கு மிகப் பரவலான எதிர்ப்பு நிலவுகிறது. தமது குறிப்புரைகளை தாக்கல் செய்துள்ள எட்டு மாநில அரசுகளும் CMZ 2008 அறிக்கையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று பரிந்துரைதுள்ள்து. அரசு சாரா சுற்றுச் சுழல் அமைப்புகளும், அதே போல மீனவ சமுதாயங்களின் அமைப்புகளும் வரைவு அறிக்கையை நிராகரித்துவிட்டன.

- வரைவு அறிக்கையில் முன்மொழியப்படுள்ள அறிவியல்பூர்வ நிர்வாக மேலாண்மை அம்சம் தவறாக பயன்படுத்தப்படுவதற்கும், திரித்துக் கூறப்படுவதற்கும் வழிவகுக்கும் என்ற கவலை பரவலாக உள்ளது. இதில் பயன் படுத்தப்பட்டுள்ள அறிவியல் சொல்லாக்கங்கள் குறித்து சில குழப்ப நிலை உள்ளது. மிகவும் முக்கியமாக பின்னடைவுக் கோட்டினை வரையறுப்பது குறித்த ஓர் அடிப்படைக் குழப்ப நிலை கானப்படுகின்றது.

- பின்னடைவுக் கோட்டின் வரையறை எராளமான அறிவியல் மட்டும் தகவல் தரவுப் பிரச்சனைகளால் நிறைந்துள்ளது. அமைச்சகத்தில் கால விரையம் எற்படுவதற்கே இது எடுத்துச் செல்லும் என்ற அச்ச நிலை எறத்தாழ அனைத்து குழுக்கள் மத்தியிலும் காணப்படுகின்றது.

- பின்னடைவுக் கோட்டினை வரையறுக்கப்படுவதற்கும், ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மைத்திட்டம் உருவாக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதி பெறப்படுவதற்கும் இடையேயான இடைப்பட்ட காலம் சில சுயநல சக்திகள்

தங்களுக்கு சாதகமாக சுறு சுறுப்புடன் செயல்படும் காலமாகப் பயன்படுத்தக் கூடிய அச்சநிலை உள்ளது.

- மேலும் மீனவர் சமுதாயத்தின் வாழ்வாதார உரிமைகள் வரைவு அறிக்கையில் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது.

- தற்பொழுது 32 உறுபினர்களைக் கொண்டதாக முன்மொழியப்பட்டுள்ள நீடித்த கடற்கரை மண்டல மேலாண்மைக்கான தேசிய வாரியத்தில் தங்கள் பிரதி நிதிகளும் சேர்க்கப்பட வேண்டும் என பல்வேறு முகமைகள் கேட்டிருக்கின்றன.

- வரைவு அறிக்கைக் குறித்த பிரச்சனகளைக் குழுக்கள் எழுப்பியுள்ள போதும் பெறும்பாலானவை தற்போதைய CRZ நிர்வாகத்திலுள்ள பிர்ச்சனைகளையே சுட்டிக் காட்டியுள்ளன. இது தொடர்பாக CRZ அறிக்கையில் திருத்தங்கள் எற்பட வேண்டுமென்று கோறுகின்றன. தற்போதைய அமலாக்க அமைப்பு பலவீனமாக உள்ளது; விதிமீறல்கள் மிகச் சாதரணமாக நடைபெறுகின்றன என்பது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

குழு கீழ்வருவனவற்றை பரிந்துரைத்துள்ளது.

அ. நவீன வின்வெளி தொழில் நுட்பத்தை பயன் படுத்தி கடற்கரை மண்டல ஒழுங்குமுறை விதிமீறல்களைத் தடுப்பது, நிறுவனங்கள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளை வலுப்ப்டுத்துவது மற்றும் சட்ட சீர்திருத்தம்.

- செயற்கைக் கோள் மற்றும் தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி கடற்கரைப் பகுதிகளின் வரைபடங்களை உருவாக்கவும் விதி மீறல்கள் நடைபெறும்போதே உடனுக்குடன் கண்காணிக்கவும் உகந்த ஒரு தொழில் நுட்பத்தை உருவாக்க தேசிய அளவிலான திட்டத்தை செயலாக்க அமைச்சகத்திற்கு குழு பரிந்துரைக்கிறது.

- பல்வேறு விதி முறைகளின் கீழ் செயல்படும் திட்ட அனுமதி முறை சீராக முறைப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்; இருப்பினும், மிக முக்கியமானதும் கடினமானதும் ஆன சுற்றுச் சுழல் ஒருங்கிசைவை உருதிபடுத்த வேண்டியது மிக அவசியமாகும். தற்போது திட்ட அனுமதி வழங்கும் மாநில அரசு அமைப்புகள் பெரும்பாலும் செயலர், சுற்றுச் சுழல் தலைமையில் இயங்குகின்றன. இதன் விளைவாக, உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் உத்திரவிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றும் பொறுப்புள்ள இந்த அதிகாரிகள் அமலாக்க வழிகாட்டுதல்களுக்கு குறைந்தபட்ச நேரம் கூட ஒதுக்குவதில்லை.

- மாநில கடற்கரை மண்டல மேலாண்மை நிர்வாகங்களின் தகுதியை மேம்படுத்த வேண்டும்; குறிப்பாக சிறப்பான முடிவுகளை மேற்கொள்வதற்கான தகவல் ஆதாரங்களைக் கட்டமைக்க வேண்டும். கடற்கரை ஒழுங்குமுறை மண்டலம் தொடர்பான அனைத்து திட்டங்களின் அனுமதிகள் மற்றும் அத்திட்டங்களுக்கான சுற்றுச் சுழல் பாதிப்பு மதிப்பீடு (EIA) அனுமதி தொடர்புகளைப் பதிப்பதற்கு இணையதள வசதி அமைப்புகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஆ. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிக்கையில் திருத்தங்கள் மேற்கொண்டு மீனவ சமுதாயத்தினரின் குடும்பங்களின் வசிப்பிடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு பாதுகாப்பு வழங்குவது.

CRZ - III இன் கீழ்வரும் மீனவர் குடியிருப்புகள் தொடர்பான பரிந்துரைகள்.

- CRZ அறிக்கை 1991-இன் படி CRZ மண்டலம் III (மீனவ சமுதாயம் உள்ளிட்ட) உள்ளூர் சமுதாயங்கள் குடியிருப்புப் பகுதியாக வரையரக்கப்படுள்ளது. இதில் உயர் மட்ட பேரலை வரிசையிலிருந்து 200 மீட்டருக்கு உட்பட்ட பகுதி “வளர்ச்சி அல்லாத மண்டலம்” என்று வரையருக்கப்பட்டுள்ளது. முன்பே அனுமதி பெற்று கட்டடப்பட்ட பழைய கட்டுமானங்களில் 1991-இன் விதியின்படி தரைவெளி அலகு (FSI) நிலவும் வெற்றிடப் பகுதி மற்றும் அனுமதிக்கப்பட்ட அடர்த்தி அளவுகளை மிகாத கட்டடங்களின் பழுது பார்க்கும் பகுதி தவிர வேறு எவ்விதமான கட்டிடப் பணிகளுக்கும் அனுமதி இல்லை. இந்த வளர்ச்சியல்லாத மண்டலப் பகுதிக்குள் விவசாயம், தோட்டம், புல் வளர்த்தல் காடு வளர்த்தல், பூங்கா அமைத்தல், விளையாட்டு மைதானம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் அனுமதிக்கப்படுகின்றன. மேலும் உயர் மட்ட பேரலை வரிசையிலிருந்து 200 மீட்டர் முதல் 500 மீட்டர் வரையான பகுதிகள் மீனவர்களின் பாரம்பரிய உரிமை உள்ள பகுதியாகவும். மீனவ கிராமங்கள் மற்றும் குப்பங்களாகவும் பயன்படுத்தப்பட்டு வருவதாலும் குடியிப்புக்களைக் கட்டவும் மறுசீரமைக்கவும் அனுமதிக்கப்படுகின்றது. கட்டுவது மற்றும் மருசீரமைப்பது, கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. இம்மண்டலப் பகுதியில் உள்ளூர் சமுதாயங்களுக்கான உள் கட்டமைப்பு வசதிகளான பொது மழைக்கூடாரங்கள், சமுதாயக் கழிவரைகள், நீர் வினியோக வசதிகள், பள்ளிகள், மருந்தகங்கள் போன்றவை அனுமதிக்கப்பட்டுள்ளன. 1991-இன் தரைவெளி அலகு விதியின்படி 9 மீட்டர் உயரத்த்தினுள் ஒரு தரைத்தளமும் 2 மாடிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளது. சில மீனவ சமுதாய அமைப்புகள் அதிகரித்து வரும் குடும்பத் தேவைகளைச் சமாளிக்க விதிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மேம்பாட்டுக் கட்டுப்பாட்டில் சில மாற்றங்களை விரும்புகிறார்கள். தரைவெளி அலகு (FSI) அளவை உயர்த்த வேண்டுமென்று கோரியுள்ளனர். இது ஏற்றுகொள்ளத் தக்கது போல் தோன்றுகிறது; இருப்பினும் எந்த மாற்றங்கள் கொண்டு வந்தாலும் இந்த விலை மதிக்கமுடியாத சொத்துக்களின் உடைமை உரிமையும் பயன்பாடும் மீனவ சமுதாயத்தினருக்கு மட்டுமே உரியது என்ற சிந்தனையை மனதில் இருத்தியே கொண்டுவரப்பட வேண்டும். மண்டலம் III-இல் FSI அளவை உயர்த்துவது தொடர்பாக அரசு விவாதித்து, உடைமை உரிமை மற்றும் பயன்பாடுக் கட்டுபாடுகளுக்கு உட்பட்டு உரிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரைக்கின்றது.

வாழ்வாதாரங்கள் தொடர்பான செயல்களை உள்ளடக்குவது தொடர்பான பரிந்துரை:-

- மீனவ சமுதாயத்தின் வாழ்வாதாரத் தேவைகள்--அவர்களது தொழில் தொடர்பான நடவடிக்கைகள், மீன்பிடி தொழில் 1991-CRZ அறிக்கையில் தெளிவு படுத்தப்படாமல் விடப்பட்டு உள்ளதாகவே தெரிகிறது. இதன் விளைவாக, தங்களது நியாயமான தேவைகள் புறக்கணிக்கப்பட்டு உள்ளதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் மீனவ சமுதாயங்க்கள் தங்கள் கோரிக்கைகளை எழுப்பி இருக்கிறார்கள். தற்போது, CRZ 1991-இல் மீன் காயவைத்தல், மீன் ஏல அரங்குகள், மீன் வளைகள் காய வைக்கும்

பகுதிகள் போன்ற பாரம்பரிய மீனவ சமுதாயத்தின் 'தொழில்' தொடர்பான ஒரு நடவடிக்கை கூட குறிபிடப்படவில்லை. மீனவ சமுதாயத்தின் வாழிவில் தாக்குதல் தொடுக்கக்கூடிய தீவிர முரண்பாடாக இது உள்ளது. CRZ அறிக்கை 1991-இல் இத்தகைய நடவடிக்கைகளின் பட்டியலை மறு ஆய்வு செய்து, மண்டலங்கள் II மற்றும் III பகுதிகளுக்குள் இத்தகைய நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கின்றது. பட்டியல் எந்த வகையிலும் தவறாகப் பயன்படுதுவதற்கு உகந்ததல்லாதவாறு, மிகக்கவனமாக உருவக்கப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக 'மீன் பதப்படுத்தும் நிலையங்கள்' சேர்க்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உள்ளது. இருந்தாலும், மிகப் பெரிய பதப்படுத்தும் நிலையங்கள் அமைக்கப்படும்போது மாசுபடுதலும், மீனவ சமுதாயத்தினை சாராதவர்கள் உடைமையாளர் ஆவதற்கும் வாய்புகள் உள்ளது தெளிவாகிறது.

- CRZ III (0-200 மீட்டர்) மேம்பாடு அல்லாத மண்டலத்தில் மீனவர்களுக்கான குடியிப்புகள் அனுமதிக்கப் பட்டபோதும் சுற்றுளா போன்ற பொருளாதார நடவடிக்கைகள் அனுமதிக்கப்படவில்லை. இப்பகுதிக்குள் மீனவர் சமுதாயத்தையே உடைமையாளராகக் கொண்ட இத்தகைய நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அதிகரித்து வருகிறது. இக்கோரிக்கை, ஏற்க்கப்படக் கூடியதாக இருந்தாலும், இப்பகுட்திக்குள் சுற்றுலா அமைப்புகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும். இதனால் இவற்றின் அளவுகள், பாதிப்பு அல்லது உரிமையாளர் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவது கடினமாகிவிடும். இத்திருத்தம் பரிசீலிக்கப்படுவதாக இருந்தால் மிகுந்த எச்சரிக்கையுடன் கையாளப்படவேண்டும் என்பதே குழுவின் பார்வையாகும்.

மீனவர் உரிமைகளுக்கான சட்ட உருவாக்கம் குறித்த பரிந்துரைகள்:-

- வளர்ச்சி திட்டங்கள் என்ற பெயரில் தமது வீடுகளும் வாழ்வாதாரங்களும் எவ்வாறு இடம் பெயருகின்றன என்பது தொடர்பான மீனவர்களின் வாக்கு மூலங்களைக் குழு கேட்டறிந்தது. உதாரணமாக, மும்பையில் வெர்சோவ, ஆந்திரப் பிரதேசத்தில் மசிலிப்பட்டிணம், குஜராத்தில் முந்தரா ஆகிய இடங்களில் பெரிய அளவிலான வளர்ச்சிப்பணிகள்--வீட்டு வசதி முதல் துறைமுகங்கள் வரை--மேற்கொள்ளப்பட்டன. அவை அங்கு வாழும் மீனவர் சமுதாயங்களின் வாழ்கையை ஆகிரமித்து அவர்களின் வாழ்வாதரங்களிலும் பாதிப்பு எற்படுத்தியுள்ளது. இங்கு மிகப் பெரிய குழும நிறுவனங்கள் மற்றும் கட்டிட ஒப்பந்ததாரர்களுக்கு எதிராக நெடிய, கடினமான போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது என்பதையும் மீனவர்கள் நினைவு கூர்ந்தனர். வனங்களில் பாரம்பரியமாக வாழும் பழங்குடி மக்களின் குடியிருப்பு உரிமையைப் பாதுகாக்கும் வகையில் பாரம்பரிய வனக்குடியிருப்போர் சட்டம் 2006 நிறைவேற்றப்பட்டதைப் போல மீனவர் குடியிருப்பு உரிமைகளை பாதுகாக்கவும் உரிய மத்திய அமைச்சகம் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று CMZ குறித்து ஆய்வு செய்த நாடளுமன்றக் குழுவுக்கு பேராசிரியர் மா.சா.சுவாமிநாதன் அளித்துள்ள பரிந்துரைக் குழு ஏற்று அப்படியே முன்மொழிகிறது.

### இ. தல-சிறப்புத் திருத்தங்கள் அடிப்படையிலான மும்பை மேம்பாடு மற்றும் மறு மேம்பாட்டுத்திட்டம் போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது:

- மும்பையில் முன்பே உள்ள சொத்துக்களின் மறு மேம்பாட்டுக்கான தேவைகளைக் குழு அங்கீகரிப்பதுடன், மும்பையை சிறப்பு நேர்வாகவும் கருதுகிறது. இருந்த போதும், நகரில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு மட்டுமேயான இத்திட்டங்களை, கடற்கரைப் பகுதிகளுக்கு அடிப்படையாக உள்ள கடற்கரை ஒழுங்குமுறை கட்டுப்பாட்டு விதிகளுக்கு இடையூறு ஏற்படுத்தாமல் ஏன் அனுமதிக்கப்படவில்லை என்பது தெளிவாக இல்லை. சில குறிப்பிட்ட பகுதிகளிலுள்ள குறிப்பிட்ட கட்டிடங்களில் மறு மேம்பட்டுக் கட்டுமான வேலைகளுக்குக் கட்டுப்பாட்டுடன் கூடிய அனுமதி வழங்கபடுவதுடன் இப்பிரச்சனையை அரசு மிகக் கவனமாக பார்க்க வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைக்கிறது.

- கடலோர ஒழுங்கு முறை மண்டலப் பகுதிகளில் கட்டுமானத் திட்டங்களை மேற்கொள்ள தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் கொள்கைகளை மாநில அரசுகள் மருபரிசீலனை செய்ய வேண்டியது மிக அவசியமாகும். இத்தகைய வீட்டு வசதிதிட்டங்களுக்குப் பொது நிதியைஅளிப்பதன் மூலம் தற்போதைய குடியிருப்பாளர்களின் தேவைகளைச் சமாளிக்க பயன்படக்கூடிய அதே நேரத்தில் சுற்றுச் சுழல் பாதுகாப்பிலும் சமரசம் நேராத வகையில் இந்த மேம்பாட்டுப் பணிகள் அமையும்.

ஈ. கடற்கரைப் பகுதுகளில் துறைமுக விரிவாக்கத் திட்டங்களினால் கடற்கரைப் பகுதிகளில் ஏற்படும் தொடர் பாதிப்புகளைக் கணக்கில் கொண்டு துறைமுக விரிவாக்கத்தை நெறிப்படுத்தும் வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்துவது:-

- இத்தகைய மேம்பட்டுத் திட்டங்கள் பெரும்பாலும் கடற்கரைப் பகுதிகளுக்குப் பெரும் ஆபத்தினை ஏற்படுத்துவதாகவே அமைகின்றன. குறிப்பாக கடற்கரைகள் பெரும் அரிப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது, மேலும், கடல் கடற்கரை தோற்றத்திலும் பெரும் மாற்றங்களை காண முடிகிறது. வரும் ஆண்டுகளில் கடற்கரைப் பகுதிகளில் பல்வேறு துறைமுகங்களை உருவாகுவதற்கான திட்டங்களை மத்திய மாநில அரசுகள் முன்வைத்துள்ளன. இத்திட்டங்கள் கடற்கரைப் பகுதிகளில் சரி செய்ய இயலாத அளவிற்கு தீய விளைவுகளை ஏற்படுத்தும். குழு கீழ் கண்டவற்றை பரிந்துரைக்கிறது.

i. கடற்கரைப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட திட்டங்களால் ஏற்படும் கூட்டு விளைவுகளை அரசு உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும். அது இல்லாதவரையில் இருக்கின்ற துறைமுகங்களை விரிவுபடுத்துதல் மற்றும் புதிய திட்டங்களைத் தொடங்குவதை நிறுத்திவைக்க வேண்டும்.

ii. கடல் பகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் CRZ 1991 திருத்தப்பட வேண்டும். இது துறைமுகத் திட்டங்களால் கடலிலும் அதை ஒட்டிய கரையோரப் பகுதிகளிலும் ஏற்படும் பாதிப்புகளை நெறிபடுத்த வழி வகுக்கும்.

iii. ஜனவரி 9, 2009 வெளியான சுற்றுச் சுழல் பாதிப்பு மதிப்பீடு அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களின் படி விரிவாக்கம் அல்லது நவீனமயமாக்கும் திட்டங்கள் மாசு அளவில் அதிகரிப்பு இன்றியும் கூடுதல் நீர் மற்றும் நிலம் தேவையின்றியும் தயாரிக்கப்பட்டால் அவை சுற்றுச் சுழல் அனுமதியிலிருந்து விலக்கப்படும்.

உ. கடலோர நீர் நிலைகளில் கழிவு நீரை வெளியேற்றுவதை தடுக்கும் வகையில் விதிமுறைகளைக் கடுமையாக்க வேண்டும். உள் நாட்டு மாசுகட்டுப்பாடு விதிகளுக்கு மாற்று, கடல் நீரில் கழிவுகளை வெளியேற்றுவது அல்ல.

- கடல்மாசினைக் கட்டுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி குழு பலமாக பரிந்துரைக்கிறது. திரவ மாசு வெளியேற்றத்திற்கான அளவுகளை மாற்றியமைக்கும்படி குழு பரிந்துரைகிறது. கடல் நீரின் தரத்தினை கண்காணிக்கும் வகையில் பொதுமக்களும் அணுகும் வசதியுடன் கூடிய தீவிர கண்காணிப்புத் திட்டம் உருவக்கப்பட வேண்டும். CRZ 1991-இல் திருத்தங்கள் கொண்டு வந்து குழாய் மூலம் கழிவு நீர் கடலில் கலப்பதை தடுக்க வேண்டும்.

ஊ.அந்தமான் - நிக்கோபார், லட்சத்தீவுகள் பகுதிகளில் புதிய மேலாண்மை மண்டலங்களை உரிய விவாதங்கள் மற்றும் ஆலோசனைக க்கு பிறகு அறிமுகப்ப் படுத்தவேண்டும்.

- CRZ அறிவிக்கை 1991-இல் அந்தமான்-நிக்கோபார் மற்றும் இலட்சத்தீவுகள் முழுவதும் ஒரே மாதிரியாக 500 வரை நிர்ணயிதுள்ளதை குழு கவனித்தது. பல்வேறு அளவுகள், வடிவங்களில் அமைந்துள்ள தீவுகளில் இது பல்வேறு பிரச்சனகளை உருவாக்குகிறது.

- ஒருங்கிணைந்த தீவுகள் மேலாண்மையை உருவாக்கும் வகையில் தனியான தீவுப் பாதுகாப்பு மண்டல அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. இந்த அறிக்கை சூழலியல் சமூகப் பொருளாதார பிரச்சனைகள், குறிப்பாக மீனவர் சமுதாயப் பிரச்சனைகள், கடல் மட்ட உயர்வு மற்றும் நீடித்த வளர்ச்சி ஆகியவற்றுடன் டிசம்பர் 26, 2004 சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புகளையும் கருத்தில் கொண்டதாக இந்த அறிக்கை இருக்க வேண்டும். தீவுகளின் நிர்வாகம் மற்றும் அவற்றின் மக்களின் கருத்துகளையும் கேட்ட பின்னர் தீவுப் பாதுகாப்பு மண்டல அறிக்கை இறுதிப்படுத்தப்பட வேண்டும்.

எ. தீவிர பாதிப்புக்குள்ளாகும் கடற்கரை மண்டலம் என்பது போன்ற புதிய பாதுகாப்பு மண்டலங்களை அறிமுகபடுத்துவதற்கு முன்பாக அக்கொள்கைகளால் உள்ளூர் சமுதாயங்களில் குறிப்பாக மீனவ சமுதாயத்திற்கு ஏற்படும் பாதிப்புகளை மிகக் கவனமாக அலசி ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும்:-

- சிலிகா, பழவேற்காடு, பிச்சாவரம், மன்னார் வளைகுடா, வேம்பநாடு, கோரிங்கா, கட்ச்ச் வளைகுடா, போன்ற கடல் உயிரினப் பூங்காக்கள், சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்கோள காப்பகங்கள் நாட்டின் கடற்கரை நெடுக பரவியிருப்பதையும், இங்கெல்லாம் மீனவ சமுதாயங்கள் குடியிருப்பதையும்குழு நன்றாக அறிந்துள்ளது. இவை உள்ளூர்சமுதாயங்களுக்கு வாழ்வாதாரங்கள் வழங்குவதாலும் மேம்பாட்டு நடவடிக்கைகளால் பாதிக்கப்படுவதாலும் இத்தகைய பெரிய உயிர்கோள காப்பகங்களுக்கு சிறப்புக் கவனம் தேவைப்படுகிறது.

- மேற்கூறிய அம்சங்களின் அடிபடையில் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் கடற்கரைப் பகுதிகளை உருவாக்குவது மீதான கருத்தை அமைச்சகம் மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரைகிறது.

ஏ. தெளிவான வரையறைகள் அடிப்படையில் அலையாத்திக் காடுகள் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும்.

- இந்திய நாட்டின் வரைபடத்தில் கடற்கரையோரங்களில் அலையாத்திக் காடுகளுள்ள பகுதி, அவை வளர்க்கப்படக்கூடிய பகுதிகள் ஆகிய அனைத்தையும் குறியிடும் வரைபடத்தை அமைச்சகம் உருவாக்க வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. மேலும் 'பசுமை இந்தியா' போன்ற காடுகள் வளர்க்கும் திட்டப் பணிகளுக்கு வாய்புள்ள பகுதிகள் மற்றும் தேவையான நிலங்களை பாதுகாக்கும் வகையில் கட்ற்கரைப் பகுதிகளை வரையறை செய்வதாக அவ்வரைப்படம் இருக்க வேண்டும். சதுப்பு நிலங்கள், மணல் கடற்கரைகள் போன்ற பகுதிகளையும் இந்த வரையறைக்குள் கொண்டு வரும் வகையில் வரைபடம் உருவாக்கப்பட வேண்டும். அனைத்து விதமான சதுப்பு நிலப்பகுதிகளையும் உயிர்கேடையங்களாகவும் கடல் உயிரின உற்பத்திப் பகுதிகளாகவும் மிகச் சிறப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஐ. மீனவர்களின் வாழாதாரங்களுக்கு எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாதவகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தற்கால மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களில் இருந்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாக்க கடல் பகுதியையும் உள்ளடக்கலாம்.

- கடல் நீரில் திரவ இயக்கவியலைப் பொறுத்தே கடலோரச் சுற்றுச் சூழல் அமைகிறது. கடல் நீருக்கான திட்டமில்லாமல் நிலத்துக்கான திட்டம் இடுவதோ நிர்வகிப்பதோ இயலாது. மேலும், மாசுபடுத்துதல் முதல் கட்டிடங்கள் அமைத்தல் வரை நிலத்தில் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கடலில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும்.

- CRZ அறிக்கை 1991-இல் கடல் பகுதியும் சேர்க்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது. அதே வேளையில் மீனவ சமுதாயங்கள் எழுப்பும் பிரச்சனைகளும் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை உருதிபடுத்தும் வகையிலும் திருத்தங்கள் இருக்க வேண்டும்.

ஒ. அனைத்து மட்டங்களிலும் ஆய்வு மற்றும் வழிகாட்டுதல் தகுதியை பெருமளவில் வலுப்படுத்தும் வழிவகைகளை அறிமுகம் செய்ய வேண்டும்.

- நமது கடற்கரைப் பகுதிகள் பெரும் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இவற்றைத் தடுக்க வேண்டுமெனில் கடற்கரைப் பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளும் நிறுவனங்கள் நமக்குத் தேவை. தற்போதுள்ள தரவுகள் சேகரிப்பு, மற்றும் தகவல்களுக்கிடையே பெரும் இடைவெளி நிலவுகிறது, மிகவும் குறிப்பாக கொள்கை மாற்றங்கள் மற்றும் நடைமுறையில் அறிவுச் செல்வத்தை பயன்படுத்துவதில் இத்தேக்கம் நிலவுகிறது. சிறப்பான முடிவுகளை மேற்கொள்ள மத்திய, மாநில அரசுகளின் கீழுள்ள தற்போதைய ஒழுங்குமுறை அமைப்புகளை பலப்படுத்த வேண்டிய தேவையும், கடற்கரை மண்டல மேலாண்மைக்கென புதிய நிறுவனங்களை உருவாக்கப்பட வேண்டும் என்பதும் தெளிவான உண்மை.

- மேலும் மத்திய மாநில அரசுகளுக்கு உதவும் வகையிலும் கொள்கை மற்றும் சட்டப் பிரச்சனைகளை சந்திக்கும் வகையிலும் சிக்கலான தீர்மான ஆய்வுகளை மேற்கொள்வது உள்ளிட்ட நீடித்த கடற்கரை மேலாண்மை தேசிய வாரியம் அமைக்கப்பட வேண்டும்.

ஓ. கடல்மட்ட உயர்வு மற்றும் கடற்கரைப் பகுதிகள் அதிகம் மாசுபடுத்தப்படும் வாய்புகள் போன்ற எதிர்கால அபாயங்களைச் சந்தித்து முறியடிக்கும் கொள்கைகளை உருவாக்க வேண்டும்:-

- எதிர் காலத்தில் கடல்மட்டம் உயரும் அபாயம் மற்றும் புயல் மற்றும் சூறாவளிக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நாட்டின் கடற்கரைப் பகுதிகள் பெரும் அச்சுறுத்தலை எதிர் நோக்கி உள்ளதாகக் குழு கருதுகிறது. இத்தகைய நடவடிக்கைகளால் கடலோரக் குடியிருப்பு வாசிகளுக்கு ஆபத்து ஏற்படுவதோடு கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்வாதரங்களை வழங்கும் கடலோர சுற்றுச் சுழல் அமைப்பும் கடுமையாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. கடற்கரைப் பகுதிகளில் இத்தகைய பாதிப்புகளுக்குள்ளாகும் பகுதிகளை வரையறை செய்யும் வகையில் ஒரு திட்டத்தை அமைச்சகம் மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். எதிர்பார்க்கப்படும் கடல்மட்ட உயர்வு, மற்றும் இதர அச்சுறுத்தல்களால் ஏற்படும் தற்கால மற்றும் எதிகால அபாய வாய்புகளை இது கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரைக்கிறது.